# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர் : சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2056, மார்ச் 15, 2025

Weekly E-paper • March 15, 2025




## மக்கள் அரசு... மக்களுக்கே நிதி!

சுப.வீரபாண்டியன்

### பல்லாவரம்: பேரவையின் மகளிர் நாள் பொதுக்கூட்டம்!

### பதில் சொல்லுங்கள்!

தலையங்கம்

### அரசியல் மணியின் ஓயாத ஓசை !

செங்கை சிலம்பு

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர் : சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2056, மார்ச் 15, 2025 Weekly E-paper • March 15, 2025


## மக்கள் அரசு... மக்களுக்கே நிதி!

**சுப.வீரபாண்டியன்**

*திராவிட மாடல் அரசு பதவி ஏற்ற பின், நான்காவது நிதிநிலை அறிக்கை நேற்று வெளியாகி இருக்கிறது. இளைஞர்களுக்கு ஊக்கம் தருகிற, பெண்களுக்கு நம்பிக்கை தருகிற, அறிவை விரிவு செய்கிற, அன்பையும் அரவணைப்பையும் பரவலாக்குகிற நிதிநிலை அறிக்கை என்று இதனைக் கூறிட வேண்டும்!*

*ஆக்கப்பூர்வமான, மக்களுக்குப் பொருளாதார மேம்பாட்டுக்கு உதவுகிற திட்டங்களோடு மட்டும் நிறுத்தி விடாமல், 45 உலக மொழிகளில் திருக்குறளை மொழிபெயர்க்கவும், தமிழ்நாட்டில் மேலும் மூன்று மாநகரங்களில் கலைஞர் நூலகத்தைத் திறக்கவும் இந்த நிதிநிலை அறிக்கை முடிவெடுத்திருக்கிறது! அதாவது "அறிவை விரிவு செய்" என்று புரட்சிக் கவிஞர் எழுதியதை இந்த அரசு இன்று நடைமுறைப்படுத்தியிருக்கிறது!*

*20 லட்சம் மாணவர்களுக்கு மடிக்கணினிகள், 10 புதிய அரசுக் கல்லூரிகள் என்னும் இரண்டு அறிவிப்புகளும், கல்வி சிறந்த தமிழ்நாடு என்பதை மீண்டும் ஒருமுறை உறுதிப்படுத்துகிறது!*

*குறிப்பாக, பெண்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கும் மூன்று திட்டங்கள் மிகப்பெரிய நம்பிக்கையைத் தந்திருக்கின்றன. தொழில் முனைவோராக முன்வரும் பெண்களுக்குப் பத்து லட்சம் ரூபாய் கடன் உதவி, அதிலும் 20 % மானியமாக வழங்கப்படும். இப்படி ஒரு லட்சம் பெண்கள் தொழில் முனைவோராக மாறும் வாய்ப்பு ! இதற்காக 225 கோடி ரூபாயை அரசு ஒதுக்கி இருக்கிறது!*

*சொத்துப் பத்திரங்களைப் பெண்களின் பெயரில் பதிவு செய்தால், பதிவுக் கட்டணத்தில் 1% குறைத்துக் கொள்ளப்படும் என்னும் அறிவிப்பும் வெளியாகி இருக்கிறது. கட்டணக் குறிப்பிற்காகவாவது,பெண்கள் பெயரில் சொத்துகள் பதிவு செய்யப்படலாம் என்னும் நல்ல நோக்கம் இதனுள் மறைந்திருக்கிறது!*

*திராவிட மாடல் அரசின் திட்டங்களில், பெண்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள திட்டம், மகளிர் உரிமைத் தொகைத் திட்டம் ! ஒவ்வொரு மாதமும், ரூபாய் ஆயிரம், இப்போது 1.15 கோடிப் பெண்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது! அவர்கள் யாரிடமும் போய் நின்று கையேந்த வேண்டியது இல்லை. அவரவர் வங்கிக் கணக்கிற்குத் தவறாமல் அந்தத் தொகை வந்து விடுகிறது! இப்போது மேலும் அந்த உரிமைத் தொகையைப் பெற விரும்பும், தகுதி உள்ள பெண்கள் உடனே விண்ணப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது !*



*இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான், காலை உணவுத் திட்டம் நடைமுறையில் இருக்கிறது. 2022 செப்டம்பர் 15, பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளில், மதுரைக்கு அருகில் கீழண்ணத் தோப்பு என்னும் இடத்தில், ஆதிமூலம் தொடக்கப் பள்ளியில் அந்தத் திட்டத்தைத் தமிழ்நாடு முதலமைச்சர் தொடக்கி வைத்தார்! இன்று 20 லட்சம் கிராமப்புற மாணவர்கள் அந்தப் பயனைப் பெற்று வருகிறார்கள். அதனை இப்போது நகர்ப்புறத்து மாணவர்களுக்கும் விரிவாக்கும் அறிவிப்பு வெளிவந்துள்ளது !*

*மொத்தத்தில் இந்த நிதிநிலை அறிக்கை, அரசின் பெயரைச் சொல்லும்.... மக்களின் மனங்களை அள்ளும் !* ●

# பல்லாவரம்: பேரவையின் மகளிர் நாள் பொதுக்கூட்டம்!

திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் செங்கல்பட்டு மாவட்டக் கிளையின் சார்பாக 08-03-2025 அன்று வடக்கு மண்டலத் துணைப் பொதுச் செயலாளர் உமா தலைமையில் மகளிர் நாள் பொதுக்கூட்டம் சிறப்பாக நடத்தப்பட்டது. சிறப்பு அழைப்பார்களாக வழக்கறிஞர் அருள்மொழி, மருத்துவர் ஷர்மிளா, சென்னை மேயர் இரா. பிரியா, தாம்பரம் மேயர் க.வசந்தகுமாரி, செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி ஆகியோரும், பேரவையின் கருத்துரையாளர்களாக வசந்தா அம்மையார், சாரதாதேவி, திராவிட மங்கை, தீ.ஸ்ரீஷா, இராகிலா, மு.உஷா, பௌஜியா, சபானா, மகாலட்சுமி ஆகியோர் கலந்து கொண்டனர். செங்கல்பட்டு மாவட்டச் செயலாளர் அன்பு, மாநில இளைஞர் அணித் துணைச் செயலாளர் இளமாறன், தோழர்கள் மோகன், செந்தாமரை கண்ணன், முத்துக்குமார், சாந்தசீலன், நாகராஜ், தட்சிணாமூர்த்தி, பிரபாகரன், அலெக்ஸ், தாம்பரம் இளங்கோ. உள்ளிட்ட மாவட்டப் பொறுப்பாளர்களின் கடின உழைப்பால் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இப்பொதுக் கூட்டத்தில் பெண்கள் மட்டுமே கலந்து கொண்டனர். பறையிசை, வெற்றிச்செல்வன் மகள் யாழிசையின் பாட்டு, இளமாறனின் மகள் யாழினி நறுமுகையின் மழலைச் சொற்பொழிவுடன் தொடங்கிய கூட்ட நிகழ்ச்சி, நன்றி உரையுடன் நிறைவுபெற்றது.





தொடர்ச்சி அடுத்த பக்கம்...

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## பதில் சொல்லுங்கள்!

இன்றைய ஒன்றிய அமைச்சர் தேவேந்திரப் பிரதானைப் போல அன்று வாய்க்கொழுப்பெடுத்துப் பேசிய கனகன் - விஜயன் என்ற வடநாட்டு இருமன்னர்களைத் தோற்கடித்து, இமயமலையின் கல்லைச் சுமக்கச் செய்து, தேரில் அவர்களைக் கட்டிப்போட்டு இழுத்து வந்தவர் எங்கள் தமிழ்நாட்டு மன்னன் சேரன் செங்குட்டுவன் என்பது அமைச்சர் பிரதானுக்குத் தெரியவாய்ப்பு இல்லை.

தமிழர்களை "நான்சென்ஸ்" என்று சொன்னார் ஜவகர்லால் நேரு. 1957 டிசம்பர் 29 நாகர்கோயில் தி.மு.க பொதுக்குழு தீர்மானத்தின்படி, சென்னை கடற்கரையில் நேருவுக்குக் கருப்புக்கொடி காட்டும் விளக்கப் பொதுக் கூட்டத்திற்குத் தடையை மீறிச்சென்ற பேரறிஞர் அண்ணா ஈ.வே.கி.சம்பத், இரா.செழியன், ஆசைத்தம்பி எனத்தொடர்ந்து நாவலர், கலைஞர், பேராசிரியர், மதியழகன், நடராசன், இலட்சிய நடிகர், நடிப்பிசைப் புலவர் உள்பட பலர் கைது செய்யப்பட்டதால் தமிழ்நாடே போர்க்கோலம் பூண்டது.

ஆயினும் விடவில்லை, 1958 ஜனவரி 6 அன்று திட்டமிட்டபடி நேருவுக்குக் கருப்புக் கொடிகளைக் காட்டி எதிர்ப்பைப் பதிவு செய்தவர்கள் தமிழர்கள். 1938, இந்தியைத் திணிக்க முயன்ற ஒன்றிய அரசுக்கு எதிராக எங்கள் தந்தை பெரியார் தலைமையில் தமிழறிஞர்களும், தமிழர்களும் போராடக் களம் இறங்கினார்கள். அந்த மொழிப்போர் 1965 ஆம் ஆண்டு வழியாக இன்றும் தொடர்ந்து கொண்டு இருக்கிறது. இந்திக்குத் தமிழ்நாட்டில் இடமில்லை என்பதில் தமிழர்கள் உறுதியாக இருக்கிறார்கள்.

தமிழ்நாடு அரசு புதியகல்விக் கொள்கையை ஏற்றுக்கொண்டுள்ளது என்று 2024 மார்ச் 15 ஆம் நாளிட்ட ஒரு கடிதத்தைக் காட்டுகிறார் அமைச்சர் பிரதான். தமிழ்நாடு அரசு அனுப்பியக் கடிதத்தில், குழு அமைத்து ஆய்வு செய்து முடிவெடுப்பதாக சொல்லப்பட்டு இருப்பதை மறைத்துப் பொய் சொல்கிறார் அவர். இப்பொழுது தொகுதிகள் மறுவரையறை என்ற ஒன்றைத் தூக்கிக்கொண்டு இருக்கிறது காவி ஒன்றிய அரசு. இப்படிப்பட்ட செப்படி வித்தைகள் எல்லாம் தமிழ்நாடு பார்த்து விட்டது.

இப்பொழுது தமிழ்நாட்டில் வரிப்பணம் வாங்கும் நீங்கள் தமிழ்நாட்டின் கல்வி நிதியைத் தரமுடியுமா? முடியாதா?

எங்கள் தமிழ்நாடு முதல்வர் கேட்கிறார், பதில் சொல்லுங்கள் !

ஆசிரியர்:
**சுப.வீரபாண்டியன்**
பொறுப்பாசிரியர்
**எழில்.இளங்கோவன்**
உதவி ஆசிரியர்கள்:
**வெற்றிச்செல்வன்**
**சாரதா தேவி**
வெளியீடு:
**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408

முன்பக்கத் தொடர்ச்சி...





# அரசியல் மணியின் ஓயாத ஓசை !

**செங்கை சிலம்பு, திராவிடப்பள்ளி மாணவர்**



1919 ஆம் ஆண்டு கனகசபை-பத்மாவதி தம்பதிக்கு ஒரு பெண் பிள்ளை பிறந்தது. அந்தக் குழந்தைக்கு "காந்திமதி" என்று பெயர் வைத்தனர் அதன் பெற்றோர். அன்று அந்தப் பெற்றோர்க்குத் தெரியவில்லை, வரலாறு உள்ளவரை இந்தப் பெண்பிள்ளையின் வரலாறை உலகம் போற்றிப் பேசும் என்று.

கல்வியையும், சமூக அறிவையும் கொடுப்பது ஒரு சிறந்த பெற்றோரின் கடமை. அதை அரசியல் மணிக்கு அவரது பெற்றோர் கொடுத்தார்கள். அப்போதே புலவர் பட்டம் பெற்றார் நமது அரசியல் மணி.

வேலூர் கனகசபைக்கு 1943 ஆம் ஆண்டு பெரியார் ஒரு கடிதம் எழுதுகிறார். அதில் "ஏதோ என் வாழ்க்கையை நான் ஓட்டிக் கொள்கிறேன்" என்று பெரியார் எழுதுகிறார். பாதுகாப்பு இல்லாதது போல உணர்கிறார். அதை வெளிப்படுத்தும்போது கனகசபை அவர்கள் தனது மகள் காந்தி மதி என்ற அரசியல் மணி அவர்களை அழைத்துச் சென்று, இனி வரும் காலங்களில் உங்களை என் மகள் பாதுகாத்துக் கொள்வார் என்று அவரிடம் விட்டுச் செல்கிறார்.

அன்று முதல் பெரியாருக்கு உதவியாக இருந்த அரசியல் மணி - "மணியம்மை" யாரானார்.

இன்றைக்குச் சில கேவலமான மனிதர்கள் அம்மையாரைப் பேசுவது மனசாட்சியற்ற பேச்சு. அம்மையார் பெரியாரை இறுதிவரை கரை சேர்த்து, பிறகு சில காலம் கழகத்தைக் கொள்கை மாறாமல் வழிநடத்திக் கொண்டு சென்றவர். அவரைப் பற்றிப் பேச எந்தத் தகுதியும் அற்ற, வெறும் அரசியல் ஆதாய நோக்கத்திற்காகப் பேசும் வாய்கள் அம்மையாரின் கால்மண்ணுக்குச் சமம்.

1944 சேலத்தில் நடந்த திராவிடர் கழக மாநாட்டில் புலவர் மணியம்மை பேசுகிறார். அந்தப்பேச்சு சில காலம் கழித்து 'அம்மா பேசுகிறார்' என்று நூலாக வெளியிடப்பட்டது. அம்மையின் இறுதி மூச்சு உள்ளவரை, சுயமரியாதை இயக்கம், திராவிடர் கழக மாநாடுகள், திராவிட மகளிர் மாநாடுகள், இவ்வாறாக, தான் வாழ்ந்த காலத்தை எதைக் கொண்டும் அழிக்க முடியாத பதிவுகளை செய்துவிட்டுச் சென்றுள்ளார்.

கந்த புராணம், இராமாயணம் இரண்டையும் ஒப்பிட்டு ஆய்வு செய்து கட்டுரை எழுதி இருக்கிறார். திராவிடர் கழக அறிக்கைகளை எழுதி வெளியீடு செய்துள்ளார்.

பெரியாரின் பேச்சுகளைக் குறிப்பெடுத்து, கட்டுரை எழுதி குடிஅரசு, உண்மை நாளிதழில் வெளியிட்டுள்ளார்.

இப்படித் தனது வாழ்நாளை தனது கல்வியைத் தனக்காக மட்டும் பயன்படுத்தாமல் இந்தத் தமிழ் சமூகத்துக்கும் உழைத்துக் கொட்டிக் கொடுத்து விட்டே சென்றுள்ளார்.

1948ஆம் ஆண்டில் குடந்தையில் அரசின் தடைச் சட்டத்தை மீறிச் செயல்பட்டு சிறையில் இருந்தார். 1949ஆம் ஆண்டில் நடந்த இரண்டாவது இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்தின் பொழுது, சென்னையில் இந்தி எதிர்ப்பு மறியலை முன்னின்று நடத்தினார், சிறைத் தண்டனை பெற்றார்.

1978 ஆம் ஆண்டு மார்ச் 16 ஆம் நாள் உடல்நலக் குறைவால் பன்முக ஆளுமை கொண்டவராக வாழ்ந்த அம்மையார் இந்த உலகை விட்டுப் பிரிந்தார்.

ஆணாக பிறந்து பெண்களுக்காக வாழ்ந்தவர் பெரியார்! அந்த ஓர் ஆணுக்காகவும், அவரது கொள்கைகளுக்காகவும் வாழ்ந்தவர் மணியம்மையார்!

**'தமிழ்ச் செம்மல்' புலவர் செயபால் சண்முகம்!**



தமிழ்நாடு அரசின் 2023 ஆம் ஆண்டுக்கான 'தமிழ்ச் செம்மல்' விருது, திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் அறிவுரைக் குழுத்தலைவர் புலவர் செயபால் சண்முகம் அவர்களுக்கு சென்னை ராஜா அண்ணாமலைபுரம், தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலை பல்கலைக்கழக வளாகத்தில் 01-03-2025 சனிக்கிழமை அன்று தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அவர்கள் வழங்கிச் சிறப்பித்தார்.

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian